Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 21 2025

வெள்ளிக்கிழமை 21, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 164 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## உச்சம் தொட்ட இளநீர் விலை

நாட்டில் தற்போது நிலவி வரும் வெப்பநிலை காரணமாக இளநீரின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு இளநீரின் விலை 300 ரூபாவைத் தாண்டியுள்ளதாக நுகர்வோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சிறிய அளவிலான இளநீர் 200 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தற்போது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக இளநீருக்கான தேவை அதிகரித்ததே இந்த விலை உயர்வுக்கு காரணமாகும்.

இதற்கிடையில், சந்தையில் ஒரு தேங்காய் விலை 200 ரூபாயைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனேமுல்ல சஞ்சீவவின்

# இதயத்தை துளைத்த தோட்டா மீட்பு

- **சடலம் அநாதையானது**
- **துப்பாக்கிதாரிக்கு உதவிய சாரதிக்கும் தடுப்புக்காவல்**

புதுக்கடை இலக்கம் 5 நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட குற்றவியல் கும்பல் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் சலத்தை உரிமை கோர இதுவரை யாரும் முன்வரவில்லை என்று வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனேமுல்ல சஞ்சீவ, சுட்டுக்கொல்லப்பட்டு 24 மணி நேரத்திற்கும் மேலாகிவிட்ட நிலையில், அவரது சடலம், பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வாழைத்தோட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மினுவங்கொடையைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவவின் சகோதரி சடலத்தைப் பொறுப்பேற்க முன்வந்த போதிலும், அவரது குடும்பப் பெயரில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சடலம் அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனேமுல்ல சஞ்சீவவின் மனைவி உடனிருந்தாலும், அவர் இன்னும் முன்வரவில்லை என்று பொலிஸார் மேலும் கூறுகின்றனர்.

இந்நிலையில், அளுத்கடை நீதவான் நீதிமன்றக் கூண்டில் இருந்தபோது, சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் கும்பல் உறுப்பினரான கனேமுல்ல சஞ்சீவவின் இதயத்தை ஊடுருவிச் சென்று, அவரது உடலில் நுழைந்த ஒரு தோட்டாவின் துண்டு, திறந்த நீதிமன்றத்தில் அரசாங்க பகுப்பாய்வாளரால் வியாழக்கிழமை (20) கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச் சூடு

## “உண்மை வெளிவரும்”

புதுக்கடை நீதிமன்றத்தில் துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு இதன் பின்னணியின் உண்மை வெளிப்படுத்துவோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(19) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

கனேமுல்ல சஞ்சீவ கொலைக்கு உதவிய

## செவ்வந்தியை தெரியுமா?

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை (19) அன்று இடம்பெற்ற துப்பாயக்கி சூட்டு சம்பவத்தில் பாதாள உல நபரான ‘கனேமுல்ல சஞ்சீவ’ கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய பெண் சந்தேக நபரின் புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளதுடன், அவரைக் கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியையும் கோரியுள்ளனர்.

சந்தேக நபர்ரான பெண் 25 வயதான பின்புர தேவகே இஷாரா சேவ்வண்டி என்றும் அவரது தேசிய அடையாள அட்டை எண் 995892480V எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 243/01, ஜெயா மாவத்தை, நீர்கொழும்பு வீதி, கட்டுவெல்லேகம என்ற முகவரியில் வசித்து வருபவர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.



தொடர்ச்சி P2



பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள்

# “பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாது”

புதுக்கடை நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பிரதான சந்தேகநபராக கைது செய்யப்பட்டவர் மஹரகம பகுதியைச் சேர்ந்த சமிந்து தில்சான் பியுமங்க கதனாராச்சி என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தலாக அமையாது என்றும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) புதுக்கடை நீதிமன்றத்துக்குள் புதன்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்க்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

புதுக்கடை நீதிமன்றத்தினுள் புதன்கிழமை (19) காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து அரசாங்கம் என்ற அடிப்படையில் கவலையடைகிறது. பாதாள குழு தரப்பினருக்கு இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2

# 2025 பட்ஜெட்க்கு பாராட்டு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்மொழிந்த 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு இலங்கை நிர்வாக சேவை சங்கம் பாராட்டு தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

செயலாளர் காலிந்த ஜயவீர பெர்னாண்டோவின் கையொப்பத்துடன் அனுப்ப்ப்பட்ட கடித்ததில், நிலையான அரசாங்க நிதி நிலைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள இலங்கை நிர்வாக சேவை சங்கம் அரசாங்கத்துக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்டிருக்கும் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதி சந்தர்ப்பங்களுக்குள் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை மிக அதிக பெறுமதியால் அதிகரித்து, மிகக் குறைந்த நிதிப் பெறுமானத்தைக் கொண்ட சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டும் உச்ச முயற்சியை மேற்கொள்வது பாராட்டுக்குரியது என இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தி நிதி கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்ளல்,



தொடர்ச்சி P2




## தீச்சட்டி ஏந்தி ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனயீர்ப்பு போராட்டம் வியாழக்கிழமை (20) முன்னெடுக்கப்பட்டது.

காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தொடர் போராட்டம் ஆரம்பமாகி, வியாழக்கிழமையுடன் எட்டு ஆண்டுகள் நிறைவு பெற்றது. அதனை நினைவுகூர்ந்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் இருந்து ஏ9 வீதி வழியாக டிப்போ சந்தி வரை சென்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீச்சட்டி ஏந்தியவாறு தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

## அரச சேவையில் 2003 வெற்றிடங்கள்

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

புதுக்கடை நீதிமன்ற விவகாரம்:

## ஆயுதமேந்திய படையினரை நீதிமன்றுக்குள் அழைக்க பேச்சு

புதுக்கடை நீதிமன்றத்தினுள் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து நீதிமன்றத்துக்குள் பிரவேசிக்கும் சட்டத்தரணிகளையும் சோதனை செய்வது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடியுள்ளதுடன், நீதிமன்றத்துக்குள் ஆயுதமேந்திய படையினரைப் பாதுகாப்புக்கு அமர்த்துவது குறித்து ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சியின் எம்.பியான ரோஹித அபேகுணவர்தன எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## “பாதுகாப்பற்ற நிலைமை”



புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் முழு நாட்டையும் பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ளியுள்ளதால் நீதிபதிகள்,ஊடகவியலாளர்கள் மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை அரசாங்கம் உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) புதுக்கடை நீதிமன்றத்துக்குள் புதன்கிழமை (19) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

புதுக்கடை நீதிமன்றத்தினுள் நடந்த கொலை, நீதிமன்றத்தை மட்டுமன்றி, ஒட்டுமொத்த நாட்டையும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இதயத்தை துளைத்த தோட்டா மீட்பு

சஞ்சீவா நின்றுகொண்டிருந்த கூண்டில் இருந்த மரக் கம்பத்தில் ஒரு துளை தோண்டிய பொலிஸ் அதிகாரிகள், அதில் ஒன்றரை அங்குலம் ஆழமாகப் பதிந்திருந்த தோட்டா துண்டை மீட்டெடுத்து, மேலதிக விசாரணைக்காக

அரசாங்க பகுப்பாய்வாளர்கள் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றனர்.

கனேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் தப்பிச் செல்ல உதவிய வேனின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிதாரி புத்தளம் பாலவி பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் புதன்கிழமை (19) கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குற்றவியல் கும்பல் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தில் சுட்டுக் கொன்ற முன்னாள் கமாண்டோ சந்தேக நபரும், அவர் தப்பிச் செல்ல உதவிய ஓட்டுநரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகக் கொழும்பு குற்றப் பிரிவு, கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொலையாளி என சந்தேகிக்கப்படும் முச்சக்கர வண்டி ஓட்டுநர் சமிந்து தில்ஷான் பியுமாங்க கண்டனாராச்சி மற்றும் வேன் ஓட்டுநர் கரஞ்சரகே மகேஸ் சம்பத் பியதர்ஷன ஆகியோரின் விசாரணைகளுக்கு 24 மணி நேரம் போதுமானதாக இல்லாததால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7/1 இன் படி கொழும்பு குற்றப்பிரிவு இயக்குநரின் உத்தரவின்படி, துறைமுக காவல்துறையில் 72 மணி நேரம் விசாரணைக்காக அவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

கொலை, அதற்கு உதவுதல் மற்றும் உடந்தையாக இருத்தல் ஆகிய பிரிவுகளை கையாளும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 296 இன் கீழ், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

மேலும், சந்தேக நபர்கள் புதன்கிழமை (19)மாலை 4:30 மணிக்கு கைது செய்யப்பட்டதாகவும், முக்கிய சந்தேக நபரான மஹரகமவைச் சேர்ந்த சமிந்து (27) ஒரு குற்றவாளி என்றும், ஓட்டுநர் சம்பத் பியதர்ஷன (44) மில்லாவயைச் சேர்ந்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

## "உண்மை வெளிவரும்"

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதால் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். அழுத்தங்களுக்கு நாங்கள் அடிபணிய போவதில்லை. அனைத்து விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படும்.

புதுக்கடை நீதிமன்றத்தில் 19ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவம் கவலைக்குரியது. துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட நபர் புத்தளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். முறையான விசாரணைகளை மேற்கொண்டு இந்த சம்பவத்தின் பின்னணியை பகிரங்கமாக வெளிப்படுத்துவோம்.

கடந்த கால ஊழல் மோசடிகள், படுகொலைகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில் குறித்த குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் தற்போது கலக்கமடைந்து தூய்மையானவர்களை போல் பேசுகிறார்கள். அரசாங்கத்தின் சட்டவொழுங்கினை கேள்விக்குள்ளாக்கும் தரப்பினர்களின் காலத்தில் தான் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அதேபோல் பொலிஸ் விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படுகிறது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சம்பவங்களின் உண்மை வெகுவிரைவில் வெளிவரும் என்றார்.

## செவ்வந்தியை தெரியுமா?

சட்டத்தரணி போன்று நடித்த இஷாரா, சம்பவத்தன்று நீதிமன்ற வளாகத்திற்குள் துப்பாக்கியை கொண்டு வந்து கொலையில் ஈடுபட்ட துப்பாக்கிதாரியிடம் ஒப்படைத்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர் போதைப்பொருள் கடத்தலிலும் ஈடுபட்டதாக போலீசார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபரின் இருப்பிடம் குறித்து தகவல் தெரிந்தவர்கள், கொழும்பு குற்றப்பிரிவின் இயக்குநரை 071-8591727 என்ற எண்ணில் அல்லது சி.சி.டி.யின் பொறுப்பதிகாரியை 071-8591735 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு காவல்துறை கேட்டுக்கொள்கிறது.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கு வழிவகுக்கும் துல்லியமான தகவலை வழங்குபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கவும் பதில் காவல்துறைத் தலைவர் பிரியந்த வீரசூரிய முடிவு செய்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

அத்தகைய தகவல்களை வழங்குபவர்களின் அடையாளம் கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது டுபாயில் இருக்கும் பாதாள உலகக் குழுத் தலைவர் மனுதினு பத்மசிறி பெரேரா அல்லது கெஹல்பத்தர பத்மேவுடன் இணைந்து கனேமுல்ல சஞ்சீவாவின் கொலையைத் திட்டமிட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

# "பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாது"

மஹரகம பகுதியைச் சேர்ந்த சமிந்து தில்சான் பியுங்க கதனாராச்சி என்ற பிரதான சந்தேக நபர் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் புத்தளம் பாலாவி பகுதியில் வைத்துவிசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் பல கொலை சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் கூறியுள்ளார்.

## ஆயுதமேந்திய படையினரை நீதிமன்றுக்குள் அழைக்க பேச்சு

புதுக்கடை நீதிமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம் குறித்து தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். இதுவரையில் நீதிமன்றத்துக்குள் பாதுகாப்பு தரப்பினர் ஆயுதமேந்திச் செல்வதில்லை.இவ்வாறான நிலையில் தான் நீதிமன்றத்துக்குள் அவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சந்தேக நபர் சட்டத்தரணியைப் போன்று வேடமிட்டு நீதிமன்றத்துக்குள் சென்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.எனவே நீதிமன்றத்துக்குள் ஆயுதமேந்திய படையினரை அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

## 2025 பட்ஜெட்க்கு பாராட்டு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்மொழிந்த 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு இலங்கை நிர்வாக சேவை சங்கம் பாராட்டு தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

செயலாளர் காலிந்த ஜயவீர பெர்னாண்டோவின் கையொப்பத்துடன் அனுப்ப்பப்பட்ட கடித்ததில், நிலையான அரசாங்க நிதி நிலைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள இலங்கை நிர்வாக சேவை சங்கம் அரசாங்கத்துக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்டிருக்கும் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதி சந்தர்ப்பங்களுக்குள் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை மிக அதிக பெறுமதியால் அதிகரித்து, மிகக் குறைந்த நிதிப் பெறுமானத்தைக் கொண்ட சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டும் உச்ச முயற்சியை மேற்கொள்வது பாராட்டுக்குரியது என இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தி நிதி கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்ளல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் வெற்றிகொள்ளக்கூடியவாறு வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தல், மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டம் மற்றும் விதிமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தல், வரி சேகரிக்கும் நிறுவனங்களின் வினைத்திறனை மேலும் அதிகரிக்க அவர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக மக்களின் நிலைப்பாடு வரவு - செலவுத் திட்டத்தில் வெளிப்பட்டிருப்பதாகவும் இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களை செயற்றிறனுடனும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்த இலங்கை நிர்வாக சேவை சங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரச சேவையில் 2003 வெற்றிடங்கள்

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட அலுவலர் குழுவின் இரண்டாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை மூலம் 11 அமைச்சுக்களின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 5 மாகாண சபைகளில் நிலவும் 4,987 வெற்றிடங்களில் 2003 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்குறித்த விதந்துரையை அமுல்படுத்துவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

## "வரிசை சுருங்கியது"

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களினால் தீவிரமடைந்து காணப்பட்ட நீண்டகால கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தாமதம் ஏற்பட்டமைக்கான தீர்வாக குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம் பத்தரமுல்லையில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தை 24 மணி நேரமும் திறந்து வைப்பதற்கு தீர்மானித்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு அறிவித்தலொன்றை வெளியிட்டுக் குறிப்பிட்டுள்ளது.

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு வருகை தந்த பயனாளிகளின் நீண்ட வரிசைகளின் குறைந்துள்ளதை அவதானித்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் புதன்கிழமை(19) தெரிவித்துள்ளார்.

நாட்டில் செவ்வாய்க்கிழமை(18) இருந்து அமுளுக்கு வரும் வகையில் அரசாங்கத்தின் கடமை நாட்களில் 24 மணி நேரமும் குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம் பத்தரமுல்லை பிரதான அலுவலகம் பொது மக்களுக்காக சேவை வழங்குவதற்குத் திறந்திருக்கும்.

அத்துடன், இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வரும் பொது மக்களின் மற்றும் சேவை வழங்கும் அதிகாரிகளின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதி உட்பட ஏனைய




உட்கட்டமைப்பு வசதிகளுக்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்தி அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால 18 அன்று இரவு முழுவதும் கடவுச்சீட்டுக்கள் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளையும் பார்வையிட்டு, சேவை வழங்கும் அதிகாரிகளுக்காக அவசியமான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் கடவுச்சீட்டுகளை பற்றாக்குறை இன்றி வழங்கக்கூடிய ஏற்பாடுகள் குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தில் காணப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவலக அமைச்சு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

மேலும் வெளிநாட்டு கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் விண்ணப்பதாரர்களினால் கொண்டு வர வேண்டிய சகல ஆவணங்களையும் முறையாக குறைபாடுகள் இன்றி எடுத்து வருமாறு திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் ஏதேனும் பிழைகள் அல்லது திருத்தங்கள் இருந்தால் இவ்வாறான விண்ணப்பதாரர்கள் அந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய நிறுவனங்கள் திறந்திருக்கும் பகல் வேளையில் அச்சேவைகளைப் பெற்று, வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம் பத்திர முல்லை பிரதான அலுவலகத்திற்கு வருகை தருமாறு அமைச்சு பொதுமக்களிடம் கோரியுள்ளது.

பொது மக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவலகங்கள் அமைச்சு என்றும் தயாராகவும் அர்ப்பணிப்புடனும் உள்ளதாகவும் அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "பாதுகாப்பற்ற நிலைமை"

நீதித்துறையில் பெரும் பணிகளை ஆற்றிவரும் நீதிபதிகளுக்கு குறிப்பிட்டளவு பாதுகாப்பு வழங்கப்பட்டாலும், அண்மைய காலங்களில் அவர்களின் பாதுகாப்பை நீக்குவதாக அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த விடயங்களை அறிக்கையிடும் ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பற்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

எனவே, விசேடமாக நீதிபதிகளின் பாதுகாப்பு, பொது மக்களினதும், ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களினதும் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.


## எம்.பி. ஆகிறார் ரணில்?

புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் ராஜினாமா செய்து, ரணில் விக்ரமசிங்கவுக்கு அதற்கான வாய்ப்பை வழங்குவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பல எதிர்க்கட்சி எம்.பிக்கள் அவரைத் தொடர்பு கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு கட்சிகள் ஏற்கனவே ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றத்திற்கு வருமாறு முன்மொழிந்துள்ளன.

சமீபத்தில் ரணில் விக்ரமசிங்க காலி பகுதிக்கு விஜயம் செய்த போது, மக்கள் அவரை பாராளுமன்றத்திற்கு வந்து பொதுச் சேவையில் சேருமாறு கேட்டுக்கொண்டனர். இந்த கட்டத்தில், ரணில் விக்ரமசிங்க, "தயவுசெய்து பொறுமையாக இருங்கள்" என்று கூறியிருந்தார்.



## “தோட்ட கம்பனிகளுக்கு

# அழுத்தம் கொடுக்க வேண்டும்”

அரசாங்கத்தில் உள்ள மலையகப் பிரதிநிதிகள், மலையக தலைவர்களை அவமதிக்கும் வகையில், வசைபாடுவதைத் தவிர்த்துப் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்திய மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான வி.இராதாகிருஸ்ணன் பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்புக்கு 22 தோட்டக் கம்பனிகளே தடையாக உள்ளதால் இந்த தோட்ட கம்பனிகளுக்கு அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(20) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான 3ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தேசிய மக்கள் சக்தி அரசின் 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பல சிறந்த திட்டங்கள் உள்ளதை வரவேற்கிறோம். நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சிறந்தது. ஏனெனில், வருமான அடிப்படையில், மக்கள் மத்தியில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.


வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் புதிய திட்டங்களை வகுக்க வேண்டும். அதானி நிறுவனம் இலங்கையில் செயற்படுத்தத் தீர்மானித்திருந்த முதலீட்டுத் திட்டத்தை இரத்துச் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆகவே, இருக்கும் முதலீடுகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் 1,700 ரூபாய் சம்பளம் வழங்குவதாகக் குறிப்பிட்டார். ஆனால், நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை.



இந்த பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்புக்கு 22 தோட்ட கம்பனிகளே தடையாக உள்ளன. ஆகவே, சம்பள அதிகரிப்புக்கு அரசாங்கம் தோட்ட கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் . தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு 2,000 ரூபாய் சம்பளம் வழங்குவதாக குறிப்பிட்டிருந்தது என்பதையும் நினைவூட்டுகின்றேன்” என தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்தில் இருவர் காயம்






பண்டாரவளை நகரில் கொமர்ஷல் சந்திக்கு அருகில் புதன்கிழமை (19) காலை மோட்டார் சைக்கிள் மற்றும் லொறி நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளின் சாரதியும், அதில் பயணித்த மற்றொருவரும் காயமடைந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், லொறியின் சாரதி கைது செய்யப்பட்டு பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த திசாநாயக்க மேற்கொண்டு வருகிறார்.

## தாய்மொழித்தினம்-2025

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் ‘தாய் மொழித் தினம் 2025’ விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை ( 21) மாலை 5.30 நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரியங்கா ஆன்பிரான்சிஸின் தமிழ் வாழ்த்தினை தொடர்ந்து, சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவின் தலைமை உரை இடம்பெறும்.

‘தாய் மொழியும் அறிவுக்கையளிப்பும்’ கோட்பாடு, நடைமுறை என்னும் தலைப்பில் உரை வழி அறிவெழுகை நடைபெறவுள்ளதுடன் பேராசிரியர் சபா ஜெயராசாவின் ஆற்றுப்படுத்தலில், “கோட்பாடு” என்பதனை முன்னிலைப்படுத்தி : வானதி காண்டீபன், ஞானசக்தி ருக்ஷ்சிவா, ‘நடைமுறை’ என்பதனை முன்னிலைப்படுத்தி, பாலரஞ்சனி காண்டீபன், கீதா கணேஸ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

பிரியங்கா ஆன்பிரான்சிஸின் தமிழிசைப் பாடலினை தொடர்ந்து ‘பரதகலா வித்தகர்’ ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வரனின் நெறியாள்கையில் ‘சின்மய கலாக்ஷேத்ரா’ மாணவிகளின் ஆடல் நிகழ்வு இடம்பெறும்.

கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக் குழுச் செயலாளர் த.இராஜரட்னம் உடைய நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெறும்.



## மாணவர்களிடமிருந்து 30 தோட்டாக்கள் மீட்பு

கண்டி, ஹசலக்க பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களிடமிருந்து சுமார் 30 தோட்டாக்கள் புதன்கிழமை (19) அன்று கைப்பற்றப்பட்டதாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹசலக்க பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் சிலர், மரப்பலகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் தோட்டாக்கள் இருப்பதைக் கண்டு அதனைச் சரிசமமாகப் பிரித்து வீடுகளுக்குச் கொண்டு சென்றுள்ளனர்.

இதில் ஒரு மாணவன் தனது வீட்டிற்குச் சென்று அடுப்பில் தோட்டாக்களை வைத்துள்ள நிலையில், தோட்டாக்கள் திடீரென வெடித்துள்ளது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், குறித்த மாணவனிடன் விசாரணை நடத்திய போது, மரப்பலகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டமை மற்றும் ஏனைய மாணவர்களும் அதனைச் சரிசமமாகப் பிரித்துக்கொண்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து, சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று சோதனையிட்டு 30 தோட்டாக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹசலக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுபோதையில் சாரதி; பாதசாரி மரணம்

கண்டி - மஹியங்கனை வீதி, ஹேன்வல பகுதியில் புதன்கிழமை (19) இடம்பெற்ற விபத்தில் பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பல்லேகலே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை - தும்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, திகனயிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த கார் ஒன்று அவர் மீது மோதியுள்ளதுடன், இதில் படுகாயமடைந்த பெண் யக்கஹபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச் சென்ற கார் சாரதி, வாரப்பிட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்தின் போது அவர் மது போதையில் இருந்ததாக தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ரஜவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த பெண்ணின் சடலம் யக்கஹபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம்



எஸ்.சதீஸ்

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெதண்டி தோட்ட பகுதி மக்கள் வியாழக்கிழமை (20) அன்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்லப்படும் ‘தூய்மையான இலங்கை’ வேலைத் திட்டத்தின் கீழ், ஹட்டன்- லெதண்டி தோட்டப் பகுதியில் மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த வேலைத் திட்டத்தின் போது, குறித்த பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அந்த வேலைத் திட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தி, அங்குள்ள சிறுவர்களுக்குத் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தமைக்கு, எதிர்ப்பு தெரிவித்தும் அந்த தோட்டத்தில் இருந்து அவரை வெளியேற்றுமாறு கோரியும் தோட்ட பொதுமக்கள் கருப்பு கொடி ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு ஹட்டன் பொலிஸார் மற்றும் தோட்ட முகாமைத்துவ அதிகாரிகள் வருகை தந்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்ச்சியாக இதுபோன்ற இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் ஆகையால் இந்த தோட்டத்திலிருந்து குறித்த நபரையும் அவரின் குடும்பத்தினரையும் வெளியேற்றுமாறு ஹட்டன் பொலிஸார் மற்றும் தோட்ட நிர்வாகத்திற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மனு ஒன்றையும் கையளித்தனர்.

மக்களின் கோரிக்கையைச் சட்ட திட்டங்களுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் என ஹட்டன் பொலிஸார் உறுதியளித்த பின்பு மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றுள்ளனர்.

## போதை குளிசைகளுடன் யாழில் ஒருவர் கைது

செந்தூரன் பிரதீபன்



போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். விசேட புலனாய்வு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்புத் துறை இலந்தைகுளம் பகுதியில் நீண்ட காலமாகப் போதை மாத்திரை விற்பனை ஈடுபட்ட சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நீதித்துறையின் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியானது

நீதிமன்ற வளாகத்திற்குள் ஆபத்தான குற்றவாளி கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதன் விளைவாக, இந்த நாட்டின் இரண்டு முக்கிய அடையாளங்கள் சுட்டுக் கொல்லப்பட்டன. முதலாவது நீதித்துறையின் பாதுகாப்பு. இரண்டாவது சட்டத்தின் ஆட்சி பற்றிய கருத்தாகும்.

சஞ்சீவாவை வழக்கறிஞர் வேடமணிந்த ஒரு நபர் சுட்டுக் கொன்றார். இந்த நபர் நீதிமன்ற அமர்வுக்கு முன்னதாக நீதிமன்ற அறைக்கு வந்து வழக்கறிஞர்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்திருந்தார். வழக்கறிஞர்கள் எப்போதாவது தங்கள் வாடிக்கையாளர்களை வழக்குரைஞர் சிறையில் அடைத்து வைக்கும் அறையிலும், பிரதிவாதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீதிமன்ற அறையிலும் சந்திப்பார்கள்.

இது பல்வேறு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கும், வழக்கு பற்றிய தகவல்களைப் பிரதிவாதிகளிடமிருந்து பெறுவதற்கும் ஆகும். நீதி பொதுவாகப் பொதுமக்கள் முன்னிலையில் நிர்வகிக்கப்படுகிறது. அதாவது, வழக்குகள் பொதுவில் விசாரிக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் நீதிமன்ற அறைக்குச் சென்று, அங்கு அமர்ந்து, வழக்குகள் விசாரிக்கப்படும் வரை காத்திருக்கும் திறனைப் பெற்றுள்ளனர். மேற்கூறிய கொலைகாரன் மேற்கூறிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டதாகத் தெரிகிறது.

பொதுவாக, கருப்பு கோட், கருப்பு பேன்ட், வெள்ளை சட்டை மற்றும் கருப்பு டை அணிந்து, கோப்புகளை ஏந்தி நீதிமன்றத்திற்குள் நுழையும் ஒருவரை பொலிஸார் சோதனை செய்ய மாட்டார்கள். ஒரு வழக்கறிஞர் சோதனை செய்யச் சென்று, சிறிய பிரச்சனையை எதிர்கொண்டால் கூட, அந்த வழக்கறிஞர் அந்த சம்பவம் குறித்து நீதிபதியிடம் புகார் அளிக்கிறார். பின்னர் நீதிபதி பொலிஸாரை அழைத்து அமைதியாக இருக்கும்படி எச்சரிக்கிறார்.

இதனால்தான் பொலிஸார் வழக்கறிஞர்களைத் தொடத் தயங்குகிறார்கள். கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட போதிலும், மேற்கூறிய சூழ்நிலைகள் தாக்குதலை நடத்துவதற்கான சுதந்திரத்தைப் பாதித்தன என்பது எங்கள் புரிதல். சஞ்சீவ கொலையில் மிகவும் மதிப்புமிக்க ஒரு சான்று அழிக்கப்பட்டது. இனிமேல், சஞ்சீவா செய்த குற்றங்களுக்குப் பொறுப்பான நபர்களின் பெயர்களை நீதிமன்றமோ அல்லது பொலிஸாரோ வெளியிட முடியாது. கணேமுல்ல சஞ்சீவ ஆபத்தான குற்றவாளி. அவர் 39 பேரைக் கொன்றுள்ளார். சிறிது காலம் சிறையில் இருந்த பிறகு 2021 இல் பிணையில் விடுவிக்கப்பட்டு நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார். அங்கிருந்து, அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவர் மேலும் 17 கொலைகளைச் செய்தார். அவர் போதைப்பொருள் வியாபாரமும் செய்தார். அவர் மீட்கும் பணத்தையும் வாங்கினார். கொள்ளையடிக்கப்பட்டது. இந்த வெளிச்சத்தில், அவர் செய்ததெல்லாம் ஒரு இறைச்சிக் கடையை நடத்துவதுதான். நாட்டை விட்டு ஓடிப்போன சஞ்சீவா நேபாளத்திற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அவர் அங்கே நீண்ட காலம் தங்கி, 2023 செப்டெம்பர் 13, அன்று போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குத் திரும்பினார். பின்னர் அவர் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வீரங்குலா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார்.

இதற்கிடையில், ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்களை அடையாளம் காண அவ்வப்போது பொலிஸார் அவரை வெளியே அழைத்துச் சென்றனர். இதற்குள், பாதாள உலக நபர்கள் ஆயுதங்களைப் பார்க்க வெளியே சென்று சுட்டுக் கொல்லப்படும் கதை தொடங்கியிருந்தது. இது அவரது உயிருக்கு பெரும் ஆபத்தை சில நேரங்களில் அவர்கள் சுடுவார்கள். இவையெல்லாம் நீதித்துறையின் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாகும்



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளயில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் திருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி அலாதியானது. பொது நலத்தொண்டுகளில் இளையத் தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளைத் தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தைக் குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

நன்றி–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 08

# சுதந்திரம் தந்த வாய்ப்பும் சவால்களும்–2



தெ.ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

கடந்த 17 ஆண்டுகால மட்டுப்படுத்தப்பட்ட சுயராஜ்ஜியத்தின் பின்னர், பெப்ரவரி 4, 1948இல் இலங்கை முழு சுதந்திரம் பெற்றது. பொருளாதார கட்டமைப்பு மற்றும் வளர்ச்சியில் இந்த அரசியல் மாற்றத்தின் விளைவுகள் தாமதமாகவே தம்மை வெளிப்படுத்தின. ஆனால் அவை இறுதியில் ஏற்றுமதி பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது. 1950களின் போது சர்வதேச வர்த்தகச் செயன்முறைகளில் கொலனித்துவ முறையைப் பராமரிப்பதில் அதிகரித்து வரும் சிரமம் பெரிய அளவில் பங்களித்தது. உதாரணமாகக் கொழும்பில் ஒரு சுதந்திர அரசாங்கம் அமைக்கப்பட்ட உடனேயே இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் இலவசமான தடையற்ற வருகையில் மாற்றங்கள் ஏற்பட்டது. சுதந்திர இலங்கையின் புதிய சட்டங்கள் இந்தியத் தொழிலாளரின் வருகையை மட்டுப்படுத்தின. இது இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் முக்கிய சவாலாக மாறியது.

இரண்டாம் உலகப்போரின் போது இலங்கையை விட்டு வெளியேறும் இந்தியர்களின் அளவு 1940களின் பிற்பகுதியில் வலுவாக தலைகீழாக மாற்றப்பட்டது, ஆனால் 1950க்குப் பிறகு, புதிய கொள்கையின் செல்வாக்கின் கீழ், நிகர வெளியேற்றம் மீண்டும் சீராக வெளி நோக்கி இருந்தது. 1954இல் இந்தியத் தொழிலாளர்களின் வருகை கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டது. தோட்டங்கள் நீண்ட காலமாக அவர்கள் நம்பியிருந்த வரம்பற்ற தொழிலாளர் தொகுப்பிலிருந்து இப்போது துண்டிக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தேசியவாதிகள் இந்தக் குடியேற்றத்தை நிறுத்தியதன் மூலம் இலங்கையர்களுக்கான தோட்ட வேலைவாய்ப்பின் எழுச்சியைப் பெற எதிர்பார்த்தனர். தோட்டங்களில்; வசித்த 770,000 இந்தியர்களைத் திருப்பி அனுப்புவதற்கு முயன்றனர். ஆனால் இந்த மக்களின்; இந்தியத் தேசியத்தை அங்கீகரிக்க இந்திய அரசாங்கம் மறுத்ததால் இலங்கையின் ஆளும் தேசியவாதிகள் விரக்தியடைந்தனர். ஒரு குறிப்பிட்ட சிறிய தொகையினருக்கு மட்டும் குடியுரிமை வழங்கியதால் ஏனையோர் நாடற்றோராகினர்.

இந்தியாவில் இருந்து இலங்கையில் குடியேறிய தொழிலாளர்களை திருப்பியனுப்புவதன் மூலம் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான ஒரு தேசியவாத சாதனமாகப் பயன்படுத்தப்பட்ட கொள்கை தோல்வியடைந்துள்ளது. அதேவேளை, தோட்டங்களில் நிலவிய மிக மோசமான நிலவரங்கள், ஆபத்தான தொழில்முறைகள் ஆகியவற்றால் இலங்கையர்கள் தோட்டங்களில் வேலை செய்வதை விரும்பவில்லை. மிகக் கடினமான உடல் உழைப்பை வேண்டுகின்ற தொழில்களே தோட்டங்களில் இருந்தன. விவசாயத்திற்குப் பழக்கப்பட்ட இலங்கையர்கள் தோட்டவேலைகளைப் புறக்கணித்தனர். அதேவேளை, தோட்டத் தொழிலாளர் சனத்தொகையின் இயற்கையான அதிகரிப்பு, மொத்த தோட்ட வேலைவாய்ப்புகள் மெதுவாகவே வளர்ச்சியடைந்த காலப்பகுதியில் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்புகளை வழங்கியது. உற்பத்தியின் பிற காரணிகளான நிலம் மற்றும் மூலதனத்தின் மீது நாடு சுதந்திரமடைந்ததன் தாக்கம் மிகவும் குறைவாகவே இருந்தது. கொலனித்துவம் மற்றும் அதிகரித்த நீர்ப்பாசனம் மூலம் விவசாயத்திற்குக் கிடைக்கும் மொத்த நிலப்பரப்பை விரிவுபடுத்துவதற்கான கொலனித்துவ அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்ந்தன. சில சமயங்களில் இரட்டிப்பாக்கப்பட்டன. ஆனால், விவசாயிகளிடையே நிலத்திற்கான தேவையில் மக்கள்தொகையால் தூண்டப்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்புடன் ஒப்பிடும்போது நிகர விளைவு சற்று அதிகமாக இருந்தது. தனியார் வெளிநாட்டு மூலதனத்தின் வழங்கல் பெருமளவில் நிறுத்தப்பட்டது.

பொருளாதாரக் கொள்கையில், சுதந்திரம் எல்லா மாற்றங்களையும் ஏற்படுத்தியது. புதிய அரசாங்கம் வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தின் கொலனித்துவ கருத்துக்கள் மற்றும் சமநிலையான வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் 100 சதவீத நாணய இருப்பு போன்ற தானியங்கி கொள்கை விதிகளைப் பயன்படுத்துவதில் எந்த உறுதிப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. 1956 வரை இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள், பின்னர் வந்த அரசாங்கங்களுடன் ஒப்பிடுகையில் பழமைவாதமாக இருந்த போதிலும், அபிவிருத்திக் கொள்கையின் ஒரு கருவியாகச் சமநிலையற்ற வரவு செலவுத் திட்டம் படிப்படியாக மதிப்பைப் பெற்றது. நிதியியல் துறையில், 1950இல் இலங்கை மத்திய வங்கியின் உருவாக்கம், பொருளாதார வளர்ச்சியின் பாதையில் நிதியியல் கொள்கை செயலில் செல்வாக்கு செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அறிமுகப்படுத்தியது. பிற புதிய நிதி நிறுவனங்களின் தோற்றம் இந்தப் போக்கிற்குப் பங்களித்தது. மத்திய வங்கியின் சுயாதீன செல்வாக்கு நடைமுறையில் ஒப்பீட்டளவில் சிறியதாகவே இருந்தது. இதற்கு இரண்டு விடயங்களை சான்றுகாட்டவியலும் (1) ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் பெருமளவில் கட்டுப்படுத்த முடியாத கொடுப்பனவுச் சமநிலை தாக்கங்களுடன் ஒப்பிடுகையில் உள்ளக, கட்டுப்படுத்தக்கூடிய நிதியியல் காரணிகளிற்கு ஒப்பீட்டளவில் முக்கியத்துவமின்மை மத்திய வங்கியின் முக்கியத்துவத்தைக் குறைத்தது. (2)அரசாங்கத்தால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வரவு-செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறையாகவே பயன்படுத்தப்படுவதனால் மத்திய வங்கியானது பொருளாதார அபிவிருத்தியில் ஒரு பெரிய சுயாதீனமான பங்கைக் கொண்டிருப்பதிலிருந்து தடுத்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, சுதந்திரமானது அனைத்து வகையான கொள்கை உருவாக்கத்தின் உணர்திறனை மக்கள் விருப்பங்களுக்குப் பெரிதும் அதிகரித்தது. இந்த காரணத்திற்காகவே அரசாங்கத்திற்கு ஒரு புதிய பொருளாதார பாத்திரம் உருவானது. கொலனித்துவ அரசாங்கம் நாட்டின் பொருளாதார வாழ்வில் ஒப்பீட்டளவில் சிறிய பங்கை வகித்து, தோட்டத் துறைக்கான சேவைகளை வழங்குவதில் தனது செயற்பாடுகளை ஒருமுகப்படுத்தியிருந்த நிலையில், சுதந்திர இலங்கை அரசாங்கம் மிகப் பெரிய பாத்திரத்தை விரும்பி பொருளாதாரத்தின் அடிப்படை மறுசீரமைப்பைக் கொண்டுவர முயன்றது. படிப்படியாக, சில சமயங்களில் பொருத்தமற்ற வகையில், புதிய பொருளாதாரக் கொள்கையின் வரையறைகள் வெளிப்பட்டன. தோட்டங்களின் மீதான வரிவிதிப்பு அளவு மிகக் கடுமையாக உயர்த்தப்படல், மேலும் அவர்கள் ஈட்டிய உபரிகள் பொருளாதாரத்தின் பிற பகுதிகளில் இறுதி மறுமுதலீடு செய்வதற்காக அரசாங்கத்தால் கைப்பற்றப்படல், பரிமாற்ற கொடுப்பனவுகள் மற்றும் சமூக சேவைகளுக்கான தற்போதைய செலவினங்களின் அளவுகள் கணிசமாக அதிகரிக்கப்படல் என்பன அவற்றில் சில. கூடுதலாக, அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளின் நேரடித் திட்டமிடல் மற்றும் குறிப்பாக நவீன தொழில்துறைத் துறையைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வடிவமைப்பதில் அதிகளவில் நுழைந்தது. அரசாங்கம் பொருளாதாரத்தை எந்த திசையில் செலுத்துகிறது என்பது எப்போதும் தெளிவாக இருக்கவில்லை, ஆனால், ஒன்று நிச்சயம்: கொலனித்துவ நாட்களில் ஒரு சிறிய மற்றும் பொதுவாகச் செயலற்ற பொருளாதார நிறுவனமாக இருந்த அரசாங்கம், இப்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான சக்தியாக மாறியது. ஆனால், தீமையான பாதையில் சென்றமையானது துரதிர்ஷ்டமானது.

எவ்வாறாயினும், 1946இல் தொடங்கிய வியத்தகு மக்கள்தொகை வளர்ச்சியால் அரசாங்கமும் மற்ற அரங்காடிகளும் செயல்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது. மிக விரைவான மக்கள்தொகை வளர்ச்சிக் காலகட்டமானது, அன்றைய மூன்றாமுலக நாடுகளின் ஒரு பொதுவான நிகழ்வாகும். இலங்கையின் மக்கள்தொகை பெருக்கம் பாரம்பரிய ஏற்றுமதி பொருளாதாரத்தின் அழிவுக்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது என்று கருதப்பட்டாலும் இதைத் துல்லியமாக மதிப்பிடுவது கடினம். மக்கள்தொகை பெருக்கத்தின் பொருளாதார விளைவுகளை மதிப்பிடுவதற்கான விரிவான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேவேளை இலங்கையில் இறப்பு வீதத்தில் நிகழ்ந்த வீழ்ச்சி ஒரு அற்புதமாகப் பார்க்கப்படுகிறது. இது முக்கியமாக ஒரு வெற்றிகரமான பொதுச் சுகாதார பிரச்சாரத்தின் விளைவாகும். சிறப்பான பொதுச் சுகாதாரக் கட்டமைப்பும் இலவச மருத்துவமும் இதைச் சாத்தியமாக்கின. இதனால் சுதந்திரத்துக்குப் பிந்தைய சில தசாப்தங்களுக்கு இலங்கை ஒரு வெற்றிக் கதையாக இருந்தது. இது காலப்போக்கில் கல்வியறிவு விகிதத்திலும் பிரதிபலித்தது. இவ்வெற்றிகள் இலவச மருத்துவம், இலவசக் கல்வி ஆகிய இரண்டினாலும் சாத்தியமாகின.

சுதந்திரத்துக்கு பிந்தைய பொருளாதாரம் சில முக்கிய சவால்களை எதிர்கொண்டது. முதலாவது, மூலதனத்தை அதிகரிப்பதும் மிகவும் கடினமாகிவிட்டது, ஏனெனில் வெளிநாட்டிலிருந்து வரும் மூலதனம் மிகக் குறைவாகவும், உள்நாட்டு சேமிப்பு விகிதம் குறைவாகவும் இருந்தது. இரண்டாவது, சாதகமற்ற வளர்ச்சி விகிதங்களின் இந்த கட்டமைப்பிற்குள், பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைக் கட்டாயப்படுத்த அதிக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ச்சியான வளர்ச்சித் திட்டங்கள் வரையப்பட்டு, பொருளாதாரத்தில் முதலீட்டின் அளவை உயர்த்தவும், தேசிய உற்பத்தியில் விரைவான அதிகரிப்புகளை உருவாக்கும் வடிவங்களில் அதை இயக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை குறுகியகால அரசியல் நோக்கங்களையே மையப்படுத்தின. இறுதியாக, இலங்கை அரசாங்கம் தனது அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவாகச் சேமிப்பைத் திரட்ட முயற்சித்தது. நவீன துறை மற்றும் குறிப்பாகத் தோட்டங்கள் மட்டுமே சேமிப்பின் முக்கிய ஆதாரமாக இருந்ததால், பெருந்தோட்ட விவசாயத்திற்கு அதிக வரி விதிப்பதும், பொருளாதாரத்தில் வேறு இடங்களில் முதலீடு செய்வதற்கு இவ்வாறு கைப்பற்றப்பட்ட உபரிகளைப் பயன்படுத்துவதும்தான் அரசின் முக்கிய மூலோபாயமாக மாறியது. இதுவே பொருளாதார கட்டமைப்பை மாற்றுவதற்கான மேலும் போக்குகளை உருவாக்கியது. இது காலப்போக்கில் அதிகரித்த அந்நியக்கடனை நோக்கியும், தற்சார்பை இழந்த இறக்குமதிப் பொருளாதாரத்தை நோக்கியும் நாட்டைத் தள்ளியது.

## கடிதங்கள்

### சுற்றுலா பயணிகளை முகம் சுழிக்க வைக்கும் சுற்றுலா தளங்கள்

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 3,32,439 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இனிவரும் காலங்களில் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தரும் எண்ணிக்கை கூடுவதற்கான வாய்ப்புகள் இருக்கும் சூழ்நிலையில், சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் இடமாக உள்ள கிழக்கு மாகாண சுற்றுலாத் தலங்களில் கழிப்பறை வசதிகள் கூட ஒழுங்கான நிலையில் இல்லாதிருப்பதாகச் சுற்றுலாப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கன்னியா வெந்நீரூற்று, பளிங்கு கடற்கரை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளிடம் நுழைவு சீட்டு பெற்று அனுமதிக்கப்பட்டாலும், அப்பிரதேசங்களில் பயன்படுத்தும் சுத்தமான கழிவறை வசதிகள் இல்லை. உடை மாற்றும் இடங்களில் கூட துர்நாற்றம் வீசுவதாகவும், மனித கழிவுகள் உள்ளதாகவும் சீரான பராமரிப்பு இல்லாமல் இருப்பதாகவும் அதனால் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாகவும் சுற்றுலா பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், சுற்றுலா அமைச்சு என்பன அவசரமாக கரிசனை செலுத்தி பாவனைக்கு பொருத்தமான இடங்களாக இவற்றை புனரமைக்குமாறு சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– நூருல் ஹுதா உமர்




# தாய் மொழி வாழையடி வாழை

## இன்று தாய்மொழி தினமாகும்





பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ், முன்னாள் தூதுவர்

ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது மொழி. மொழியினது வளர்ச்சியினை சார்ந்தே அந்த இனத்தின் கலை, கலாசார, சமூக, பண்பாட்டு அம்சங்கள் வளர்ச்சி பெறுகின்றன.

ஒரு சமூகம் வாழ்ந்ததற்கான குறியீடாகக் காணப்படுகின்ற இந்த மொழியானது, மக்கள் தமது கருத்துக்களை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்ள உதவுகின்ற ஒரு ஊடகமாகச் செயற்படத் தொடங்கியதிலிருந்து அந்த மொழியினைச் சார்ந்த சமூக கட்டமைப்புகளும் உருவாகத் தொடங்குகின்றன.

பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற பண்பாட்டு மரபுகள், நினைவுகள், ஞாபகச் சின்னங்கள், எண்ணங்கள், நூல்கள், ஆவணங்கள், கலைகள், புத்தாக்கங்கள், புராதனக் காலத்து அறிவுப் பொக்கிஷங்கள், மருத்துவக் குறிப்புகள், வெளிப்பாடுகள் போன்றனவே வளமான எதிர்காலத்தினை உறுதிப்படுத்தும்.

எமது முன்னோர்கள் கட்டிக் காத்து, பராமரித்து வந்த பாரம்பரிய அம்சங்களை, அதனுடைய தாற்பரியங்களை, எதிர்கால சமுதாயத்துக்குக் கடத்தும் ஒரு கருவியான தாய் மொழியினை தரணியில் மேலோங்கச் செய்வதில் நாம் என்றும் பின்னிற்கக் கூடாது.

இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் அதனது முதலாவது ஆகாரமாக அமைவது தாய்ப்பால் தான். அதுபோல மனிதனுக்குத் தாய் மொழியும் அவசியமானது. உலகில் உள்ள ஒவ்வொரு தனி மகனும், சமூகமும் அந்த இனத்திற்கே உரித்தான மொழிக்காக உரிமைக்குரல் கொடுத்துப் போராடுவதனை இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

அந்த வகையில், தாய்மொழிக்காக, போராடிய ஒரு மக்கள் கூட்டத்தினருக்காக உருவாக்கப்பட்ட ஒரு தினம் தான் 'தாய்மொழி தினம்'. காலனித்துவ ஆட்சியில் இருந்து உலக நாடுகள் விடுதலை பெற்றுக் கொண்டிருந்த காலகட்டமது. அதனது தொடர்ச்சியாக 1947ஆம் ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும், பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து விடுதலை பெற்றன. சுதந்திர பாகிஸ்தான் என்ற கட்டமைப்புக்குள் பாகிஸ்தானின் மேற்கு, கிழக்கு ஆகிய இரண்டு பகுதிகள் உள்வாங்கப்பட்டிருந்தன.

மத ரீதியாக இரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஒன்றிணைந்தவர்களாகக் காணப்பட்டாலும், மொழி ரீதியாக வேறுபடுத்தப்பட்டவர்களாகவே இருந்தனர். உருது மொழியே மேற்கு பாகிஸ்தானில் (இன்றைய பாகிஸ்தான்) அதிகமாகப் பேசப்படுகின்ற மொழியாகும். கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய பங்களாதேஷ்) அதிகளவு பேசப்படுகின்ற மொழி வங்க மொழியாகும்.

அன்றைய காலகட்டத்தில் இரு நாடுகளுக்குமான தேசிய மொழியாக இருந்தது உருது மொழியாகும். வங்க மொழியினை அதிகமாகப் பேசுகின்ற கிழக்கு பாகிஸ்தானியர்கள் தம்மீது உருது மொழி திணிக்கப்படுவதனை விரும்பாது, அதனை எதிர்க்கத் தலைப்பட்டனர்.

உரிமைகள்எங்குமறுக்கப்படுகின்றனவோ அங்குப் போராட்டங்கள் உருவாவது தவிர்க்க முடியாத ஓர் அம்சம். அந்த வகையில் வங்க மொழியினை தமது தேசிய மொழியாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தில் கிழக்குப் பாகிஸ்தானியர்கள் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதி 'வங்க மொழி இயக்கம்' என்றவொரு இயக்கத்தினை உருவாக்கினர்.

அந்த இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், மக்களென பல்வேறுபட்ட தரப்பினரும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய ஆட்சியாளர்களது அடக்குமுறை நடவடிக்கைகள், தொடர்ச்சியான போராட்டங்கள், ஆகியவற்றின் வெளிப்பாடாக 1956ஆம் ஆண்டு வங்க மொழி கிழக்கு பாகிஸ்தானின் தேசிய மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த போராட்டத்தின் விளைவாக, உயிரிழந்தவர்களின் நினைவு கூறும் முகமாக, ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதியினை உலக தாய்மொழி தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோவில் முன்மொழிந்தார்.

அதற்கமைய, சர்வதேச தாய்மொழி தினமானது 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ அமைப்பின் பொது மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2002இன் A/RES/56/262 தீர்மானமானது இந்த பிரகடனத்தை வரவேற்றது. 2002ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பானது பெப்ரவரி மாதம் 21ஆம் திகதியினை தாய்மொழி தினமாக அங்கீகரித்தது.

உலகளாவிய ரீதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், பன்மொழி பயன்பாட்டை முன்னேற்றுவதற்கும், உலகில் உள்ள அனைத்துத் தாய்மொழிகளைப் பாதுகாப்பதற்காகவும் உலக தாய்மொழி நாள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு அவர்கள் பேசுகின்ற மொழி அல்லது அவர்களுக்குப் புரிகின்ற மொழியில் கல்வி கிடைப்பதில்லையென யுனெஸ்கோ குறிப்பிடுகின்றது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆய்வுகளின் படி, உலகில் 7,000 மொழிகள் பேசப்படுகின்றன. இந்த மொழிகளில் சில சிறிது சிறிதாக அழிவடைந்து வருகின்றனவென அறியும் பொழுது, அது வேதனையை அளிக்கின்றது.

பத்தாயிரம் மக்களுக்குக் குறைவான மக்களால் பேசப்படுகின்ற மொழிகள் அழிவடையும் ஆபத்தான நிலையில் உள்ளதாக அந்த ஆய்வு மேலும் கூறுகின்றது. எந்த மொழியும் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும், மக்கள் பேசுகின்ற மொழியாகவும், இல்லாவிட்டால், அந்த மொழி எத்துணை சிறப்பு மிக்க மொழியாக இருந்தாலும் நாளடைவில் அழிந்து போய் விடும்.

புத்த பகவான் பேசிய 'பாளி மொழி' வழக்கிழந்து போனதற்கும் இது தான் காரணம். இயேசுநாதர் பேசிய 'ஹீப்ரு' என்ற எபிரேய மொழியும் ஒரு காலத்தில் வழக்கிழந்த மொழி தான்.

1948ஆம் ஆண்டுக்கு முன்பதாக இஸ்ரேல் என்ற ஒரு தேசம் இருந்ததில்லை. பல நாடுகளில் பரவலாக வாழ்ந்து வந்த யூதர்கள் அந்தந்த நாட்டு மொழியைத் தான் கற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு தங்களது மூதாதையர் மொழியான ஹீப்ரு மொழி பற்றி எதுவும் தெரியாது. பாலஸ்தீனத்திலும் ஹீப்ரு ஒரு வட்டார மொழியாகவே இருந்து வந்தது.

அதனால் அந்த மொழியில் பாரியளவிலான வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், இஸ்ரேல் என்ற தேசம் உருவாக்கப்பட்டதன் பிறகு அங்கு அரிச்சுவடி முதல் பட்டப்பின் படிப்பு வரை ஹீப்ரு மொழியில் பயிற்றுவிக்கப்படுகிறது.

மொழி ஒன்று அழிவடைந்து வருகின்றது என்றால், அதற்கு காரணம் அந்த மொழியினை பேசுகின்ற மக்களும், சமூகமும் தான் எனலாம்.

ஒரு மொழி அழிவடைகின்றது என்றால், உலகைப் பார்க்கின்ற தனித்துவமான வழி ஒன்று மூடப்பட்டு விடுகின்றது என்பது தான் அதன் அர்த்தம் ஆகும். ஒரு மொழி அழியும் பொழுது நாம் அந்த மொழியை மட்டும் இழக்கவில்லை. அதனுடன் இணைந்த உன்னதமான அறிவினையும், ஆற்றலையும் சேர்த்தே இழந்து விடுகின்றோம்.

நாம் எமது தாய் மொழியினை அடுத்த தலைமுறைக்கு கற்றுக்கொடுக்காத பொழுது மொழிப் பயன்பாட்டினை இழக்கின்றோம். சமூக, அரசியல், பொருளாதார காரணங்களால்

இன்று பெருமளவான மக்கள் தமது தாய் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்து செல்கின்ற பொழுது, அவர்கள் தமது தொழில் நிமித்தம் அந்தந்த நாடுகளில் இருக்கின்ற மொழிகளைக் கற்று, தாம் குடியேறிய நாடுகளிலுள்ள கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையேற்பட்டு விடுகின்றது. இதனால் படிப்படியாக தமது தாய் மொழியினை இழந்து விடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

கடந்த காலங்களில் ஆபிரிக்க கண்டத்திலிருந்து அமெரிக்காவிற்குச் சென்ற கறுப்பின மக்கள் தமது பாரம்பரிய மொழிகளை மறக்கத் தொடங்கி விட்டது வரலாற்று நிகழ்வாகும்.

தாய் மொழிகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை . அவைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. உலக அளவில் அதிக மக்களால் பேசப்படக்கூடிய மொழிகளில் ஒன்றாக எம் தாய் மொழியான தமிழ் மொழி பதினைந்தாவது இடத்தில் இருக்கின்றது.

ஸ்ரீலங்காவில் அரசகரும மொழியாகத் தமிழ் இருக்கின்றது. மலேசியா, மொரிசியஸ் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற மொழியாக திகழ்கின்றது. சிங்கப்பூரில் அது ஆட்சி மொழியாக விளங்குகிறது.

சொல் வளம் மிக்க மொழியாகத் தமிழ் மொழி காணப்படுகின்றது. அறிவியல், தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்று வருகின்ற இன்றைய காலகட்டத்தில் புதிய சொற்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். அதேவேளை, பழந்தமிழ் சொற்கள் பாதுகாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவை. வழக்கத்தில் பயன்படுத்தப்படுகின்ற தமிழ்ச் சொற்கள் ஆயிரமாக இருந்தாலும், அகராதியில் இருக்கும் சொற்கள் இலட்சத்தைக் கடந்தவை.

மொழி வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் உருவாக்கப்படுதல் அவசியம். அந்த வகையில், அன்றைய காலகட்டங்களில் வாழ்ந்த இலங்கையையும், ஏனைய நாடுகளையும் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளைப் பாராட்டுவது அவசியமாகும்.

1832ஆம் ஆண்டு ரேனியஸ் பாதிரியார் எழுதிய 'பூமி சாஸ்திரம்' , 1849ஆம் ஆண்டு இலங்கையில் வெளியான 'பால கணிதம்', 1855ஆம் ஆண்டு டாக்டர். கரோல் எழுதிய 'குறியீட்டுக் கணிதம்', இலங்கையில் வாழ்ந்த அமெரிக்கரான டாக்டர். சாமுவேல் கின் என்பவரால்1850-1855 ஆண்டுக் காலப் பகுதியில் தமிழாக்கம் செய்யப்பட்ட மருத்துவத் துறைக்கான நூல்கள், போன்றவைகள் ஆரம்பக் காலப் பகுதியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகளாகும்.

வீரமாமுனிவரின் 'சதுரகராதியைத்' தொடர்ந்து 'இலக்கியச் சொல்லகராதி' என்ற அகராதியை சுன்னாகம் குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் தொகுத்து , தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

'மோகனாங்கி' என்ற முதலாவது தமிழ் வரலாற்று நூலினை திருகோணமலையைச் சேர்ந்த தி.த. சரவணமுத்துப் பிள்ளை எழுதினார்.

இதுபோல, 'அபிதான கோசம்' என்ற கலைக் களஞ்சியத்தினை முதலாவது உருவாக்கியவர் மானிப்பாயைச் சேர்ந்த ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களாவார். முதன்முதலாக 'யாழ்' என்னும் இசைக் கருவி குறித்து சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் ஆய்வு நூல் ஒன்றினை எழுதினார். இந்த பட்டியலில் தமிழ் நாட்டு அறிஞர்களது பங்களிப்பும் ஏராளமாக உள்ளது.

"தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற மகா கவி பாரதியாரின் கவியினது வரிகளுக்கு உயிரோட்டம் தந்து கொண்டிருப்பவர்கள் இன்று புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் எம்மவர்கள் தான். அவர்களால் தான் எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் உலகளாவிய ரீதியில் பரவலாக மேம்படுத்தப்பட்டுச் செல்கின்றது. உலகத்தவர்கள் மத்தியில் தமிழ் என்ற பண்டைய மொழியின் சிறப்பம்சங்களைப் பறைசாற்றிக் கொண்டிருப்பவர்களும் அவர்கள் தான்.

பிற நாடுகளில் வசிக்கின்ற மக்கள் தத்தமது குழந்தைகளுக்குத் தாய் மொழியின் அவசியத்தினை உணர்த்துவதன் மூலம் அந்த மொழியானது படிப்படியாக எதிர்கால சந்ததியினருக்கு வாழையடி வாழையாகக் கடத்தப்பட வேண்டுமென்பதே தாய் மொழியினை நேசிக்கும் அனைவரதும் எதிர்பார்ப்பு ஆகும்.

(மீள் பிரசுரம்)

# SLT-MOBITEL Nebula Institute of Technology க்கு கௌரவிப்பு



SLT-MOBITEL இன் கல்விப் பிரிவான SLT-MOBITEL Nebula Institute of Technologyக்கு, பெருமைக்குரிய Pearson BTEC Higher Education Forum 2024 நிகழ்வில் சர்வதேச கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. சிறந்த செயற்பாட்டுக்கான கௌரவிப்பாக தொடர்ச்சியான இரண்டாவது வருடமாக இந்த உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டுக்காக சர்வதேச நிலை 3 மற்றும் நிலை 5 உயர் தேசிய கௌரவிப்பு விருதை கல்வியகம் பெற்றுக் கொண்டதுடன், உயர் தரம் வாய்ந்த தொழினுட்ப கல்வியை வழங்குவதற்கான தனது அர்ப்பணிப்பை மேலும் வெளிப்படுத்தியிருந்தது. இந்த நிகழ்வு அண்மையில் கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் நடைபெற்றது.

Nebula Instituteக்கு இந்த விருதை இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் கௌரவ. அன்ட்ரியு பெட்ரிக் வழங்கியிருந்தார். Pearson இன் பிரதிநிதிகளில் Pearson South Asia பிராந்திய தொழில் வாய்ப்பு மற்றும் தகைமைகள் பணிப்பாளர் பிரெமிலா போல்ராஜ், Pearson South Asia பிராந்திய HEQ சர்வதேச விற்பனை சிரேஷ்ட பணிப்பாளர் சித்தார்த் பர்னேர்கர் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான BTEC, PTE, and HEd Courseware போன்றவற்றின் விற்பனை பிரதி பொது முகாமையாளர் சூரியா பிபிலே ஆகியோர் கலந்து கொண்டனர். SLT இன் மனித மூலதன விருத்தி பொது முகாமையாளர் ஜனக சில்வா SLT-MOBITEL Nebula Institute சார்பாக கௌரவிப்பை பெற்றுக் கொண்டதுடன், நிகழ்வில் பொறியியலாளர் தர்ஷன பண்டாரவும் கலந்து கொண்டார்.

Nebula Institute of Technology இனால் பரந்தளவு நவீன தொழினுட்பம் மற்றும் பொறியியல் கற்கைகள் வழங்கப்படுவதுடன், தொழினுட்ப துறையின் அதிகரித்துச் செல்லும் கேள்விகளை நிவர்த்தி செய்வதாக அமைந்திருக்கும். கவனமான முறையில் வடிவமைக்கப்பட்ட பாடவிதானங்களினூடாக துறையில் காணப்படும் பாரதூரமான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மாணவர்களுக்கு பிரயோக ரீதியான, சந்தைக்கு பொருத்தமான தகைமைகள் வழங்கப்பட்டு, தமது தொழில் வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ள வசதியளிக்கின்றது.

கல்வியகத்தின் கல்விசார் பிரிவுகளில் BEng (Hons) in Electrical & Electrical Engineering, BEng (Hons) in Robotic & Artificial Engineering, BSc (Hons) in Data Science, Pearson BTEC Level 5 HND in Electrical and Electronic Engineering, Pearson BTEC Level 5 HND in Digital Technologies, Pearson BTEC Level 5 HND in Computing மற்றும் Pearson BTEC International Level 3 Foundation போன்றன அடங்கியுள்ளன.

மேலதிக கற்கைகளான Certificate In Applied Information Technology CAIT, Telecommunication Technician National Vocational Qualification (NVQ) 4/3, Optical Fibre Courses, Network Security Courses மற்றும் CompTIA Security program போன்றனவும் கிடைக்கின்றன.

கல்வியகம் தரமான கல்வியை வழங்குவது, தனிநபர்களின் மீது கவனம் செலுத்துவது, தொழினுட்ப நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் நேரடி அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் சகாயமான கற்கை கட்டணங்களை பேணுவது போன்றவற்றினூடாக தன்னை உறுதியாக நிலையில் பேணுகின்றது.


# பணிகளை இலகுவாக்கும் AI உதவியாளர்கள்–AI agents

வேலைப்பளு நிறைந்த திங்கட்கிழமை ஒன்றில் பணிக்கு சமூகமளித்து, நாளொன்றில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகளை பார்வையிட்டு, அவற்றை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதை பற்றி நீங்கள் சிந்திக்கக்கூடும். ஆனாலும், இன்றைய காலகட்டத்தில் உங்களுக்கு அவசியமான ஆவணங்களை சாராம்சப்படுத்துவதும், தரவுகளை வகைப்படுத்துவதும் AI Agent இடம் ஒப்படைத்து, அந்தப் பணி உடனடியாக முடிவடையும் வரையில் உங்களின் தேநீரை பருகி, சற்று ஓய்வெடுப்பதற்கு உங்களுக்கு வசதியுள்ளது. அதன் பின்னர், உங்களின் Teams சந்திப்புகளின் அறிக்கைகளை சாராம்சப்படுத்துவதை மற்றுமொரு AI Agent இடம் ஒப்படைத்து, முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் ஆவண சாராம்சம் மற்றும் வகைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெற்று, அறிக்கையை தயாரிப்பதை மாத்திரம் நீங்கள் மேற்கொள்ளலாம். இவை அனைத்தையும் நீங்கள் தனித்து மேற்கொண்டால், ஒரு நாளுக்கு அதிகமாக தேவைப்படக்கூடிய பல காரியங்களை, உங்களுக்கு AI Agents பயன்படுத்தி குறைந்த காலப்பகுதியில் மேற்கொள்ளக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடையவும், திங்கட்கிழமை ஒன்றில் நேரம் எஞ்சியிருக்கும்.

### இந்த AI Agents என்றால் என்ன?

இன்று வரையில், AI தொழினுட்பமாக சகல தொழினுட்ப சாதனம் மற்றும் மென்பொருளிலும் பரவியுள்ளது. உலகம் AI தொடர்பில் வெளிப்படுத்திய அச்சுறுத்தல்களும் படிப்படியாக குறைந்த வண்ணமுள்ளன. எவ்வாறாயினும், ஒரு காலகட்டத்தில் AI மாதிரிகள் தொடர்பில் பலராலும் பேசப்பட்டதைப் போன்று, தற்போது AI Agents பற்றியும் பரவலாக பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த AI Agents என்பது என்ன? AI agents என்பது, AI வலிமையை பயன்படுத்தி, சில உறுதியான காரியங்களை சுயமாக மேற்கொள்ளக்கூடிய Program ஆகும். நீங்கள் இதுவரையில் Copilot போன்ற AI Assistant உதவியை பெற்றிருப்பீர்கள். ஆனாலும், உங்களுக்கு இதுவரையில் அதற்கு அப்பால் சென்று, ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் விசேடமாக அமைந்த AI Agents களின் உதவியை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் உள்ளது. AI இனால் வலுவூட்டப்படும் புதிய apps ஆக AI agents ஐ குறிப்பிடுவதும் சரியானதாகும். அதாவது, எளிமையான உள்ளீட்டுக்கு பதிலளிக்கும் AI agent முதல், முழுமையாக தன்னியக்கமாக செயலாற்றக்கூடிய AI agents வரை பெருமளவு பரந்து காணப்படுகின்றன. வியாபாரமொன்றில் பயன்படுத்துவதாயின்,



அங்கு பொருட்கள் அல்லது சேவைகள் மீது வாடிக்கையாளர்களை கவர்வது முதல் விற்பனை ஓடர்களை தன்னியக்கமாக நிர்வகித்துக் கொள்வது வரை பணிகளை முறையாக மேற்கொள்ளும்.

### AI agents ஐ எவ்வாறு கட்டியெழுப்புவது? AI agents ஐ எவ்வாறு செயலில் ஈடுபடுத்துவது?

உங்களுக்கு சுலமாக Microsoft Copilot Studio ஊடாக பல்வேறு செயற்பாடுகளுக்காக விசேடமாக அமைந்த AI Agents தயாரித்து, வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது. உதாரணமாக, சேவையை பெறுபவருக்கு நிறுவனம் தொடர்பான சிக்கலுக்கு நிறுவனத்தின் கொள்கைகள், சட்ட விதிமுறைகள், ஒழுங்குகள் போன்றவற்றிலிருந்து உடனடியாக பதிலை தேடி வழங்கும் employee self-service agent ஐ உருவாக்குவது கடினமான காரியமல்ல.

தேவையெனில் செயற்திட்ட முகாமையாளராக ஏதேனும் திட்டமொன்றை நிர்வகிக்கும் AI உதவியாளர் முதல், மனித வளங்கள் பிரிவின் தரவுகள் கட்டமைப்பை நிர்வகிப்பது முதல் கடமையில் ஈடுபட்டுள்ளவர்கள் அடிக்கடி கேட்கும் பிரச்சனைகளை தீர்ப்பது வரை பல்வேறு செயற்பாடுகளுக்கு உதவும் AI உதவியாளர் வரை AI agents உங்களுக்காக வடிவமைத்து, Copilot Studio பயன்படுத்தி மேலும் உங்களுக்கு உகந்த வகையில் செயற்படுத்திக் கொள்ளலாம்.

### Generative AI உடன் இதுவரையில் வந்துளள் பயணம் AI agents உடன் எவ்வாறு அமையும்?

AI agents க்கு சுயமாக செயலாற்ற அனுமதிப்பது - அதாவது, உங்களின் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய பணிகளை அல்லது மனித ஈடுபாடு அவசியமில்லாத பணிகளை முழுமையாக ஒப்படைப்பதில் ஏதேனும் அவதானம் நிலவுகின்றதா? இல்லை. எப்போதும் AI agents அவசியமான தரவுகளுக்காக மாத்திரம் தம்மை ஈடுபடுத்துகின்றன.

எவ்வாறாயினும், Generative AI உடன் கடந்து வந்துள்ள இந்த குறுகிய ஆனாலும் பரந்த AI வரலாற்றினுள், AI agents என்பது இன்னமும் ஆரம்ப நிலையில் உள்ளன.

ஐக்கிய அரபு அமீரகம்

### பலஸ்தீனரை காசாவில் இருந்து வெளியேற்றும் முயற்சி:

# அமீரகம் நிராகரிப்பு



பலஸ்தீன மக்களை காசாவில் இருந்து வெளியேற்றும் முயற்சியை நிராகரிப்பதாக, ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட காசா பகுதியைக் கைப்பற்றி அதன் மக்களை வெளியேற்றும் முடிவை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

அந்த அறிவிப்பினை தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, கடந்த சில நாட்களாக மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதில் ஒரு பகுதியாக அமீரகத்துக்கு, புதன்கிழமை (19) அவர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, அமைச்சர் மார்கோ ரூபியோ, அபுதாபி தேசிய கண்காட்சி மையத்தில் நடைபெறும் ஐடெக்ஸ் சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி வளாகத்திற்குச் சென்றார். அப்போது அங்குப் பார்வையிட வருகை தந்திருந்த அமீரக ஜனாதிபதி ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யானை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்பில் மத்திய கிழக்கு மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், காசாவில் உள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகள், பிரதேச அளவிலான அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்த விவகாரங்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளன.

அப்போது அமீரக ஜனாதிபதி மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் கூறுகையில்,

"இரு நாட்டுத் தீர்வை அடிப்படையாகக் கொண்டு நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும் ஒரு பாதையுடன் இணைப்பதன் மூலம் காசாவின் மறுகட்டமைப்பைப் பிரதேச அளவில் உறுதி செய்வது முக்கியம். பிரதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மோதல் விரிவடைவதைத் தடுக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோல், அமைதிக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் பாலஸ்தீன மக்களை வெளியேற்றும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சியையும் அமீரகம் நிராகரிக்கிறது. இதில் அமீரகம் உறுதியாக உள்ளது என மீண்டும் வலியுறுத்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸ்

## நுளம்பை பிடித்துக்கொடுத்தால் சன்மானம்



பிலிப்பைன்ஸில் நுளம்பை உயிருடனோ அல்லது கொன்றோ தந்தால் சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகரில் பரவிவரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த உள்ளூர் நிர்வாகம் நூதன முயற்சி மேற்கொண்டுள்ளது. அதில், பொதுமக்கள் நுளம்பை உயிருடனோ, கொன்றோ கொண்டுவந்து தந்தால் 5 நுளம்புக்கு ரூ.1.50 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நிர்வாகத்தின் இந்த அறிவிப்பால் பொதுமக்கள் அதிகம் பணம் ஈட்டுவதற்காக வேண்டுமென்றே தண்ணீரைத் தேங்கவைத்து நுளம்புகளை உற்பத்தி செய்யும் அபாயமும் ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பிலிப்பைன்சில் இந்த ஆண்டில் மட்டும் 28,234 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 40 சதவீதம் அதிகமாகும்.

அவுஸ்திரேலியா

### கரை ஒதுங்கிய 150 திமிங்கிலங்களை

## கருணை கொலை செய்ய முடிவு

அவுஸ்திரேலியாவின் தீவு மாகாணங்களில் ஒன்றான தாஸ்மானியாவின் வடமேற்கு கடற்கரையோர பகுதியில், 150க்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் செவ்வாய்க்கிழமை (18) கரையொதுங்கியுள்ளன.

இதனைத் தொடர்ந்து, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் துறையினர் அந்த பகுதிக்குச் சென்று அவற்றைக் கடலுக்குள் மீண்டும் கொண்டு சென்று விடும் பணியில் ஈடுபட்டனர்.

எனினும், வானிலை மோசமடைந்த நிலையில் அவற்றைக் கடலில் விடும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு இதே வானிலை நீடிக்கும் என கூறப்படுகிறது. இந்நிலையில், அவற்றில் 90 திமிங்கிலங்களே இன்று உயிருடன் உள்ளன என தெரிய வருகிறது.

உருவத்தில் திமிங்கிலங்களைப் போன்று காணப்பட்டாலும், இவை டொல்பின் குடும்பத்தில் வருபவை. 3,000 கிலோ கிராம் எடையுடன், பொதுவாகக் கடற்கரையிலிருந்து சற்று உள்ளடங்கிய பகுதியில், கடலின் ஆழத்தில் வசிப்பவை. இந்த திமிங்கிலங்கள் கடற்கரைக்கு வந்ததற்கான காரணம் சரிவரத் தெரியவில்லை. இவற்றைக் காப்பாற்ற முடியாத மற்றும் கடலுக்குள் திருப்பி விட முடியாத சூழலில், கடைசியாக அவற்றைக் கருணை கொலை செய்யும் முடிவு எடுக்கப்படும் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுவாக தாஸ்மானியா பகுதியில், பைலட் வகை திமிங்கிலங்கள் இதுபோன்று அதிக அளவில் கடந்த காலங்களில் கரையொதுங்கின.

இந்நிலையில், 1974ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக இவ்வகை திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்டது சிற்றி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.

நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு முந்தையதான விலகல் முறையிலான சுற்றில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து சிற்றி வெளியேறியது.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்த சிற்றி, ஸ்பானிய லா லிகா கழகமான மட்ரிட்டின் மைதானத்தில் வியாழக்கிழமை (20) அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து 3-6 என்ற மொத்த கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் கிலியான் மப்பே பெற்றதோடு, சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கோ கொன்ஸலேஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனிடம் 3-4 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்று தொடரிலிருந்து இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் வெளியேறியது.



## அத்லாண்டாவிலிருந்து வெளியேறும் லுக்மன்?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான அத்லாண்டாவின் முன்களவீரரான அடெமோலா லுக்மன், நடப்புப் பருவகால முடிவில் கழகத்தை விட்டு வெளியேறுவார் எனப்படுகிறது.

அடுத்தாண்டு வரையில் அத்லாண்டாவுடன் லுக்மன் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறபோதும் பயிற்சியாளர் ஜியான் பியர்ரோ கஸ்பெரினியை விமர்சிக்கப்பட்டதைத் தொடர்ந்தே கழகத்தை விட்டு வெளியேறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.


### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல்–வில்லா போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் வியாழக்கிழமை(20) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

லிவர்பூல் சார்பாக மொஹமட் சாலா, ட்ரென்ட் அலெக்ஸான்டர் அர்னோல்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வில்லா சார்பாக, யூரி டெலிமான்ஸ், ஒலி வட்கின்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் 61 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சானலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும் காணப்படுகின்றது. இதில் மற்றைய அணிகளை விட லிவர்பூல் ஒரு போட்டியில் அதிகமாக விளையாடியுள்ளது.





உத்தரப்பிரதேசம்

### திரிவேணி சங்கமத்தில்

## 50 இலட்சம் நேபாள பக்தர்கள் புனித நீராடல்

பிரயாகராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட நேபாள பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அயோத்தியில் ஸ்ரீ ராமரையும், காசியில் பாபா விஸ்வநாத்தையும் நேபாள பக்தர்கள் அதிகளவில் தரிசனம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிவேணி சங்கமத்தில் இருந்து புனித மண் மற்றும் கங்கை நீரை நேபாள பக்தர்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர்.

சிலர் அதை நெற்றியில் தடவிக்கொள்கின்றனர். அவ்வாறு எடுத்துச் செல்லப்படும் புனித மண் மற்றும் கங்கை நீர் பல்வேறு மத விழாக்களில் பயன்படுத்தப்படுகிறது என்று, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா

### ரீல்ஸ் வீடியோ எடுத்த 3 இளைஞர்கள்

## ரயிலில் மோதி பலி

ரீல்ஸ் வீடியோ எடுத்த 3 இளைஞர்கள், ரயில் மோதி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள்,கர்நாடக மாநிலம், பெங்களூரு புறநகர் மாவட்டம், தொட்டபள்ளாப்புராவில் உள்ள ஒரு ஆயத்த ஆடை நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்கள் எனவும், உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மூவரும், 18, 20, 24 வயதுடையவர்கள் ஆவர்.

புதன்கிழமை (19) மாலை, வேலை முடிந்ததும் நிறுவனத்தில் இருந்து 3 பேரும் வீட்டிற்குப் புறப்பட்டனர். தொட்டபள்ளாப்புரா, சித்தேநாயக்கனஹள்ளி பகுதியில் உள்ள ரயில் தண்டவாளம் பகுதிக்கு வந்த 3 பேரும், அங்கு ரீல்ஸ் வீடியோ எடுக்க முயன்றனர். அப்போது அங்கு வந்த எக்ஸ்பிரஸ் ரயில் ஒன்று 3 பேர் மீதும் மோதியது.

இதில் மூவரு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 21, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.